செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
பிறப்பிப்பவர் – திருமதி. சொ. கற்பகம், எம்.எஸ்.சி., எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
ப. மு. எண். 2163/அ1/2025, நாள். .06.2025.

-------

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பதிவறை எழுத்தரிலிருந்து பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தமை – செங்கல்பட்டு மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகம் – இளநிலை உதவியாளர் – திருமதி.நே.தீபா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 30.01.2024 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. அரசாணை(நிலை) எண். 151 பள்ளிக் கல்வி (ப.க.1(1))த் துறை, நாள் 09.09.2022
2. செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 7713/அ1/2023, நாள். 29.01.2024.
3. செங்கல்பட்டு மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 1599 /அ1/ 2012 நாள் 23.11.2012
4. செங்கல்பட்டு மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 402 /அ1/ 2017 நாள் 04.04.2018
5. செங்கல்பட்டு மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 472 /அ1/ 2025 நாள் 18.03.2025

-----------

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.நே.தீபா என்பார் பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் பார்வை (2)ன்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 30.01.2024 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் முதன்முதலில் பார்வை (3) ல் காணும் செயல்முறைகளின் படி இரவுக்காவலராக பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை (4) ல் காணும் செயல்முறைகளின் படி பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சார்ந்த பணியாளரின் கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 5ல் காணும் கடிதத்தின்படி மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பார்வை (1)ல் காணும் அரசாணை (நிலை) எண். 151 பள்ளிக் கல்வி (ப.க.1(1))த் துறை நாள் 09.09.2022–ன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், சார்ந்த பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்கவேண்டும் எனத் தெரிவித்தும், தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும்,

துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (தேர்வுக் குறியீட்டு எண். 172) தேர்விலும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், மேலும் தனியருடைய தகுதிகாண் பருவம் அதிகப்படியாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாகக் காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 33(4)ன்படி தனியர் அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார் என்ற நிபந்தனையின்படி, இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்காணும் இளநிலை உதவியாளருக்கு அவரது பெயருக்கு எதிரே கலம் (5)–ல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குவது குறித்து அலுவலரின் மேலான ஆணை பணிந்து வேண்டலாகிறது.

| வ. எண். | முன்னுரிமைப் பட்டியலின்படி வரிசை எண். | பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 1 | திருமதி.நே.தீபா<br>இளநிலை உதவியாளர்<br>மாவட்டக்கல்வி அலுவலகம்<br>(தொடக்கக்கல்வி)<br>செங்கல்பட்டு. | 30.01.2024<br>முற்பகல் | 30.01.2024<br>முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை அன்னாரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு

26/6/25

முதன்மைக் கல்வி அலுவலர்,
செங்கல்பட்டு

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல்
1) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), செங்கல்பட்டு

மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி)
செங்கல்பட்டு
ந.க.எண் 472/அ1/2025 நாள் .7.2025
(நகல்) உரியவருக்கு வழங்கப்படுகிறது.

District Educational Officer
(Elementary Edn.)
Chengalpattu-603 111.

பெறுநர்
திருமதி.நே.தீபா
இளநிலை உதவியாளர்
மாவட்டக்கல்வி அலுவலகம்
(தொ.க)
செங்கல்பட்டு